*மார்ச் திங்களுக்கான தலைப்பு:*

# ஆண் - பெண் சமத்துவ உறவுச் சமூகம் படைக்கும் இளைஞர்கள்

**தொடக்கமாக...**

“ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்.
வீட்டுக் குள்ளேபெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலைகழிந்தார்.
கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்.” இவை முண்டாசுக்கவி பாரதியின் அனல் பறக்கும் கவிதை வரிகள். பாலின சமத்துவம் என்பது இன்று நேற்று மட்டும் பேசப்பட்டதல்ல. மாறாக இது மனித சமூகத்தில் பல ஆண்டுகளாக பேசப்பட்ட ஒன்றுதான். மனித சமூக வரலாற்றில் பெண்கள் அடிமைகளாக, இரண்டாம்தர குடிமக்களாக, ஓட்டுரிமை இல்லாதவர்களாக, கல்வியுரிமை இல்லாதவர்களாக மிகவும் கீழ்ப்படுத்தப்பட்ட நிலையில் விடியற்காலை விண்மீனாய் மலர்ந்தது மிதவாத பெண்ணியச் சிந்தனைகள். அதைத் தொடர்ந்து தீவிரவாத பெண்ணியம், மார்க்சிய பெண்ணியம் என பல தளங்களில் பெண் விடுதலையை முன்வைத்து காலம், சமூகம் என்னும் சூழலுக்கேற்ப பல பெண்ணிய இயக்கங்களும் பெண்ணிய சிந்தனைகளும் வளர்ந்து சமூகத்தையும் வளர்த்தெடுத்தன.

**பெண்ணுரிமைப் போராளி இளைஞர் இயேசு:**

இப்பெண்ணிய சிந்தனைகளும் கடந்த சில நூற்றாண்டுகளில் மலர்ந்ததல்ல. மாறாக இயேசுவின் காலத்திலும் காலத்தின் விடுதலைக்குரலாக இயேசுவின் பெண்விடுதலைக் குரல் ஒலிக்கவே செய்தது எனலாம். பொது இடத்தில் ஒரு யூத ராபி பெண்ணோடு பேசுவதில்லை. ஆனால் இயேசு சமாரியப் பெண்ணோடு பொது இடத்தில் உரையாடுகிறார். தனக்கென பெண் சீடர்களைக் கொண்டிருந்தார். பெண்கள் ஐந்நூலினைப் படிக்கக் கூடாது, பெண்களுக்குக் கற்றுக் கொடுக்கக்கூடாது என்று சொன்ன சமூகத்தில் மரியா நீ நல்ல பங்கை தேர்ந்து கொண்டாய எனச் சொல்லி பெண்களுக்கும் கற்றுக் கொடுத்தார். பெண்கள் செய்யும் வீட்டு வேலைகளை அடிப்படையாக வைத்து இறையாட்சி என்னும் உன்னத பொருளை விளக்கிக் கூறினார். இயேசுவோடு சிலுவைப் பயணத்திலும் சிலுவை அடியிலும் பெண்களே இறுதிவரை நின்றனர். ஏன் உயிர்ப்பிற்குப் பின் இயேசு உயிர்த்தார் என்னும் உன்னத செய்தியினை முதலில் கொண்டு சென்ற தூதுவரும் பெண்ணே. இப்படி இயேசுவின் பணி வாழ்வு என்பது அன்றைய ஆணாதிக்க யூத சமூகத்தில் நிலவிய கொடிய பெண் அடிமைத்தனத்தின் எதிர் குரலாக ஒலித்தது.

**இன்றைய திருஅவையில்**

இன்று நமது திருத்தந்தையும் இக்கருத்தையே **கிறிஸ்து வாழ்கிறார்** என்னும் தனது திருத்தூது ஊக்க உரை **எண்** 42ல் திருஅவை ஒரு காலத்தில் பெண்களை இரண்டாம் தரமானவர்களாகவும், பெண்களுக்கு ஆன்மா உண்டா என்று விவாதிக்கும் அளவில் இருக்கவே செய்தது. ஆனால் இன்று வாழும் திருஅவையாக பாலின சமத்துவத்தை முன்னிறுத்தி பேசவும் செயல்படவும் செய்கிறது. இன்னும் சிறப்பாக தனது வரலாற்றில் இருக்கும் ஆணாதிக்க அடிப்படையிலான பாலின எதிர் செயல்பாடுகள் ஆகிய அனைத்தையும் ஒப்புக் கொண்டு தன்னைத் திருத்திக் கொள்கிறது. இன்று தனது நிகழ்காலமாக இருக்கும் இளைஞர்களை பாலின சமத்துவம் கொண்டவர்களாக இருக்கவும் ஊக்குவிக்கிறது எனக் கூறுகிறார்.

**பாலின சமத்துவத்தை முன்னெடுக்க**

**1. விழிப்புணர்வு:**

படைப்பில் நாம் அனைவரும் சமமானவர்கள், இறைவனின் மீட்புத்திட்டத்தில் நாம் அனைவரும் சமமான பங்களிப்பு கொண்டிருப்பவர்கள் என்பதையும் நமது வரலாற்றில் இது

மறுக்கப்பட்டிருக்கிறது, இதை மாற்ற வேண்டும் என் அறிவதுமே விழிப்புணர்வாகும். இந்த விழிப்புணர்வை மறைக்கல்வி, கலந்தாய்வு கூட்டங்கள், பயிற்சிகள், விழிப்புணர்வு செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகளை ஆவணப்படுத்துதல், இது போன்ற சிந்தனை உடையவர்களிடம் தொடர்ந்து உரையாடல் நடத்துவது போன்றவற்றின் மூலம் விழிப்புணர்வு பெற வேண்டும் அதைப் பரப்புதல் வேண்டும்.

**2. சிந்தனை**

இயேசு என்னும் துடிப்புமிகு இளைஞன் பெண் விடுதலைவாதியாகவே இருந்தார். விவிலியத்தில் பல ஆளுமைகள் பெண் விடுதலையை முன்வைப்பவையாக இருந்தன. இவற்றை சிந்தனைகளாக சிந்திப்பது, தவக்காலத்தில் பெண்ணுரிமை மையப்படுத்திய சிந்தனைகளுடன் சிலுவைப்பாதையில் பங்கேற்பது, மறையுரைகள் போன்றவற்றில் வெளிப்படுத்துவது, பெண்களின் சமநிலைக்கு எதிரான செயல்பாடுகளாகிய வரதட்சணை, கல்வியுரிமை மறுப்பு மேலும் இவற்றை நியாயப்படுத்தும் பழமொழிகள், சமூக வழக்கங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து விமர்சிப்பது, பெண்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வது, அதற்கான வழிமுறைகளைக் கற்றுத்தருவது போன்றவை சிந்தனைகளாக மலர்தல் வேண்டும்.

**3. செயல்**

இன்றைக்கு நமது பங்கு, மறைமாவட்டம், சமூகம் போன்ற அமைப்புகளின் தலைமைப் பொறுப்புகளில் 50% இடஒதுக்கீட்டை உறுதி செய்வது, பெண்களின் பங்கேற்பினை உறுதி செய்வது, பெண்களின் குரல் பொது வெளியில் உரக்க கேட்க ஏற்பாடு செய்வது, நமது தனிப்பட்ட வாழ்வில் வரதட்சணைப் பெறாமல் திருமணம் செய்வது, பெண்களை இரண்டாம் தரமாக நடத்தமாட்டோம், பார்க்க மாட்டோம் என உறுதி எடுப்பது, பெண்களுக்கு எதிரான செயல்பாடுகளை கண்டித்து குரல் கொடுப்பது, அவ்வாறு குரல் கொடுப்பவர்களோடு இணைந்து செயல்படுவது, சாதித்த பெண்களை அடையாளப்படுத்துவது, நம்மில் திறமைவாய்ந்த பெண்களை அடையாளப்படுத்தி சாதிக்கத் தூண்டுவது நமது செயல்பாடுகளாக மலர்தல் வேண்டும்.

*ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவி லோங்கி, இவ் வையம் தழைக்குமாம் ~ பாரதி*